புதுவை அரசு
பள்ளிக்கல்வி இயக்ககம்
(விளையாட்டு மற்றும் இளைஞர் பணி)

தேதி:03.03.2017

**செய்திக்குறிப்பு:**

ஆண்டுதோறும் மத்திய அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டுத்துறையால் விளையாட்டுத் துறையில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், விளையாட்டு பயிற்சியாளர்களுக்கும், விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. விளையாட்டுத் துறையில் சாதனையாளர்களுக்கு வழங்கப்படும் தேசிய அளவிலான உயரிய விருதுகளான 'அர்ஜுனா விருது, துரோணாச்சாரிய விருது, இராஜீவ் காந்தி கேல் ரத்னா' விருது, தயான்சந்த் விருது, ராஷ்ட்ரிய கேல் புரோட்ஷாஸன் புரஸ்கார் விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2017ஆம் ஆண்டின் மேற்கூறிய விருதுகளுக்குரிய விவரங்களையும் விண்ணப்பங்களையும் www.myas.nic.in என்னும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். நிறைவுறுத்திய விண்ணப்பங்களை 15.04.2017 தேதிக்குள், புதுச்சேரி அண்ணா நகர், பள்ளிக்கல்விஇயக்ககம் வளாகத்தில் மூன்றாவது தளத்திலுள்ள, விளையாட்டு மற்றும் இளைஞர் நலம் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

OFFICE OF THE DEPUTY DIRECTOR OF SPORTS AND YOUTH SERVICES
Education Department
Puducherry.

(மு. லெனின்ராஜ்)
இணை இயக்குனர்
விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்
பள்ளிக்கல்விஇயக்ககம்
புதுச்சேரி